Journal of Management and Economics (JME)
Faculty of Management and Commerce |South Eastern University of Sri Lanka
ISSN 2950-7227 | Vol: 1 | Issue: I | December 2022

# கொழும்புத்துறை பிரதேச பெண்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் தும்புத்தொழிலின் பங்களிப்பு

**Sithamparanathan Uthayakumar [1] & Gunasajini Mahendran [2]**

*Department of Economics, Faculty of Arts, University of Jaffna*
*Correspondence: ssuthayan71@gmail.com, 1 & sayinimahendran@gmail.com 2*

**ஆய்வுச்சுருக்கம்.**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் பங்களிப்பு முக்கிய இடம் பெறுகின்றது. இலங்கையின் பொருளாதார வளச்சியில் தும்புத்தொழில் முக்கியபங்களிப்பினை வழங்கிவந்துள்ள போதிலும் தற்போது எந்தளவிற்கு நாட்டின் சிறு கைத்தொழிலிற்கு இது பங்காற்றுகின்றது என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். தற்போதைய நெருக்கடிகளின் மத்தியில் ஆய்வுப்பிரதேசமான யாழப்பாண பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொழும்புத்துறைப் பிரதேசத்தில் வசிக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தில் தும்புத்தொழிலின் வகிபாகத்தினையும் இத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் எதிர்நோக்கும் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவற்றையும் இனங்காணல் போன்ற ஆய்வின் நோக்கங்களை கருத்திற்கொண்டு J/62 கொழும்புத்துறை கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் 2021 காலப்பகுதியில் தும்புத்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 15 பெண்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம் மூலம் முதல்நிலைதரவுகள் திரப்பட்டுள்ளதுடன் இணையத்தளம், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலக புள்ளிவிபரத்திரட்டு போன்றவற்றில் இருந்து இரண்டாம்நிலைத் தரவுகள் திரட்டப்பட்டு அளவுசார் மற்றும் பண்புசார் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு அட்டவணைகள் மூலம் தர்க்க ரீதியிலும் விபரணப்படுத்தல் முறையிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இதன்படி தும்புத்தொழிலில் ஈடுபட்ட பின்னரான சராசரி மாதாந்த வருமானமானது ரூபா 10433.33 ஆக அதிகரித்ததுடன் அவர்களின் மாதாந்த செலவீனமும் அதிகரித்துள்ளது. தும்புத்தொழிலில் பெண்கள் ஈடுபட்டதன் பின்னர் அவர்களின் வலுவூட்டல் நிலை அதிகரிப்பு தொடர்பாக சில கூற்றுக்கள் வழங்கப்பட்டு பெறப்பட்ட தரவுகளின் பரகாரம் அக் கூற்றுக்களின் சராசரிப் பெறுமதியான 3.78 ஆனது $3.5 \leq x \leq 5.0$ எனும் வீச்சினுள் காணப்படுவதனால் இக் கூற்றுக்கள் உயர்ந்த நிலையில் ஏற்றுக கொள்ளப்பட்டுள்ளன. எனவே தும்புத் தொழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் வருமானம் அதிகரித்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட்டிருப்பதுடன் மேற்படி தும்புத்தொழில் முயற்சியானது சொந்த முயற்சியாக காணப்படுகின்றமை, நவீன இயந்திரங்களின் பயன்பாடின்றி உடல் வலிமையைப் பெருமளவில் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுகின்றமை உட்பட்ட பல்வேறு பலங்கள் காணப்படுகின்றன. சாதகமான வாய்ப்புக்கள் காணப்பட்டாலும் பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றன காணப்படுவதனைக் காணமுடிகின்றது. எனவே தும்புத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் நிதிப்படுத்தலில் சில பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றமையால் நிதி நிறுவனங்கள் முயற்சியாளரின் நிலையைக் கருத்திற்கொண்டு செயற்படுவதுடன் இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நீண்டகால கடன் வசதிகளை வழங்குவதுடன் பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு போதியளவு சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் இவர்களுக்கான ஊக்குவிப்புத்தொகையாக குறிப்பிட்டளவு மானியத்தை அரசாங்கம் வழங்குவதன் மூலமும் பெண்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் தும்புத்தொழிலின் பங்களிப்பினை அதிகரிக்க முடியும்.

**முதன்மைச் சொற்கள்:** தும்புத்தொழில், வருமானம், செலவீனம், வலுவூட்டல், கொழும்புத்துறை

**ஆய்வின் அறிமுகம்**

தனிமனித வருமானம், குடும்ப வாழ்வாதாரம் போன்றன மாதாந்த வருமானத்தில் செல்வாக்கு செலுத்துவது மட்டுமன்றி ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்திலும் பெருமளவு செல்வாக்கு செலுத்துகின்றது. அந்தவகையில் சிறிய, நடுத்தர மற்றும் சுய தொழில் முயற்சிகள் இலங்கை பொருளாதாரத்தின் ஒரு முக்கியமான தந்திரோபாயமாக காணப்படுவதுடன் பொருளாதார வளர்ச்சி, பிராந்திய அபிவிருத்தி, வறுமைக்கான வலுவூட்டலுக்கான உந்துசக்தியாகவும் இருக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் முக்கியத்துவம் பெறுகின்ற கைத்தொழில்களாக தும்புத்தொழில், சீமெந்துக் கைத்தொழில், சீனிக் கைத்தொழில், ஆடைக் கைத்தொழில், பாரம்பரிய கைப்பணி கைத்தொழில்கள் என்பவற்றைக் குறிப்பிட முடியும். அதில் தும்புக் கைத்தொழிலானது முக்கியமான ஒரு கைத்தொழிலாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில் இருந்து உபகரணங்கள் இல்லாது கையினாலேயே தும்புசார் அனைத்து உற்பத்திகளையும் செய்து சந்தைப்படுத்தி வந்துள்ளனர். இப்போதும் இவ்வாறான பாரம்பரிய முறை நடைமுறையில் இருந்து வருகின்ற போதிலும் பெருமளவில் உபகரணங்களின் உதவியின் மூலம் தும்புத்தொழிலை மேற்கொள்ளும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.


இலங்கையின் சில பிரதேசங்களில் மிகக் குறைந்தளவிலான தொழிலாளர்கள் சிறியளவிலான தொழிற்சாலைகளை அமைத்து தும்புத்தொழிலை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்களின் வருமானமும் விருத்தியடைந்ததாக தெரியவில்லை. தங்களது வாழ்க்கையை நடாத்துவதற்கு ஒரு வருமானம் அவசியம் என்பதற்காக தும்புத்தொழிலை விடாது மேற்கொண்டு வருகின்றனர். சிலருக்கு தொழிலை விருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அதற்குரிய முதலீடு காணப்படுவதில்லை. அவற்றைப் பெறுவதிலும் பாரிய சவால்கள் காணப்படுகின்றன. கூடுதலாக கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் இத் தொழிலை நம்பித்தான் வாழ்ந்து வருகின்றார்கள்.

தென்னை மரத்தின் அனைத்து பாகங்களும் ஒவ்வொரு வகையான உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதுடன் தும்புத்தொழிலுக்கு தென்னையானது மிகக் கூடுதலான அளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் சிறு கைத்தொழிலாளர்கள் கூடுதலான வருமானத்தை பெற்று வருகின்றனர். தும்பு சார்ந்த கைத்தொழில்களுக்கு கூடுதலான சந்தை வாய்ப்பு இப்போதும் இருந்துவருகின்றது. ஆனால் தும்புத்தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஆரம்ப காலம் முதல் இத்தொழில் வளர்ச்சியடையாமல் குறைந்தளவிலான வேகத்திலேயே நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் கொழும்புத்துறை கிராமத்திலும் பெண்களின் வாழ்வாதாரத்தில் தும்புத்தொழில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினாலும் பல்வேறு பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவற்றால் இத்தொழிலை கைவிடும் நிலையே காணப்படுகின்றது.

**ஆய்வுப்பிரதேசம்**

இலங்கையில் வட பகுதியில் 10,58,762 மக்கள் தொகையைக் கொண்டு காணப்படுகின்ற வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் சிறிய மாவட்டமாக உள்ள 88,138 மக்கள் தொகையைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 16 பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றான யாழ்பாண பிரதேச செயலர் பிரிவில் உள்ள 29 கிராமசேவகர் பிரிவுகளில் ஒன்றான J/62 கொழும்புத்துறை கிராம வேசகர் பிரிவு ஆய்வுப்பிரதேசமாக அமைந்துள்ளது.




**வரைபடம் 01: ஆய்வுப்பிரதேசம்**
மூலம்: நில அளவைத் திணைக்களம்

இதன்படி யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படும் J/62 கிராமசேவகர் பிரிவானது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது கொழும்புத்துறை கிழக்கில் அமைந்துள்ளதுடன் இதன் பரப்பளவு 0.46 சதுர கிலோமீற்றர் ஆகும். இங்கு 639 குடும்பங்கள் காணப்படுவதுடன் 1965 குடித்தொகை காணப்படுகின்றது. இவ் 1965 குடித்தொகையில் 690 குடித்தொகை தொழில்புரிவோராக காணப்படுகின்றனர தில் 976 ஆண்களும் 1089 பெண்களும் உள்ளனர்.

**ஆய்வின் நோக்கம்**

1. தற்போதைய நெருக்கடியின் மத்தியில் பெண்களின் வாழ்வாதாரத்தில் தும்புத்தொழிலின் பங்கினை ஆராய்தல்.
2. கொழும்புத்துறை பிரதேசத்தில் தும்புத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் எதிர்நோக்கும் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்களை இனங்காணல்.
3. தும்புத்தொழிலினை எவ்வாறு விருத்திசெய்ய முடியும் என்பனை ஆராய்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

Journal of Management and Economics (JME)
Faculty of Management and Commerce |South Eastern University of Sri Lanka
ISSN 2950-7227 | Vol: 1 | Issue: I | December 2022

**ஆய்வுக் கருதுகோள்கள்**

1. Ho: தும்புத்தொழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம்அதிகரித்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படவில்லை.

   Ha: தும்புத்தொழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம் அதிகரித்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படுகின்றனர்.

2. Ho: தும்புத்தொழில் ஈடுபடும் பெண்களுக்கு அத்தொழிலில் பலங்கள், வாய்ப்புக்கள் என்பன காணப்பட்டாலும் பல்வேறு பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றை எதிர்நோக்கவில்லை.

   Ha: தும்புத்தொழில் ஈடுபடும் பெண்களுக்கு அத்தொழிலில் பலங்கள், வாய்ப்புக்கள் என்பன காணப்பட்டாலும் பல்வேறு பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றை எதிர்நோக்குகின்றனர்.

## 2. இலக்கிய மீளாய்வு

சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை நோக்கும் போது பின்வரும் ஆய்வானது குறிப்பிட்ட ஆய்விற்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

Sathiyabama (2010) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இந்தியாவின் (தமிழ் நாடு) பெண்களின் சுயதொழில் பற்றி ஆராய்கின்றது. இதற்காக முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் விபரண ரீதியான பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவாக பெண்களின் சுயதொழில் முயற்சியானது குடும்பம் மற்றும் சமூகத்தின் பொருளாதார மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இலங்கை முழுவதும் சிறு கைத்தொழிலின் பங்கானது பெண்களின் வாழ்வாதாரத்தில் பெரியளவில் தாக்கம் செலுத்துகின்றது என்ற வகையில் பின்வரும் ஆய்வுகள் இவ்வாய்விற்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

Gunapalan மற்றும Safiya ummah (2012) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இலங்கையின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சுயதொழிலில் ஈடுபடும் பெண்களின் வெற்றிக்கான காரணிகளை ஆய்வு செய்துள்ளது. இதற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ்வாய்விற்காக விபரணப்பகுப்பாய்வும் பிற்செலவுப் பகுப்பாய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவாக சுயதொழிலில் ஈடுபடும் பெண்களின் வெற்றிக்கான காரணிகளாக குடும்பப்பின்னணி, ஆளுமைக் காரணிகள், நிறுவன ரீதியான ஆதரவு போன்றன இனங்காணப்பட்டுள்ளன. குறிப்பாக தன்னம்பிக்கை, சுயாதீனம் போன்ற காரணிகள் மற்றைய காரணிகளை விட அதிகம் செல்வாக்கு செலுத்துவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Rathiranee & Semasinnge (2014) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது யாழ்ப்பாணத்தில் சுயதொழிலில் ஈடுபடும் பெண்களின் வெற்றிக்கான காரணிகளை ஆய்வு செய்துள்ளது. இதற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும்

இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் விபரணப் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக கிராமப்புற பெண்களின் சுயதொழில் முயற்சிகள் அவர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் வலுவூட்டலை அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Kaplana மற்றும் Ambepitiya (2018) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெண்களின் தொழில் முயற்சிகள் அவர்களின் அதிகாரவலு அதிகரிப்பில் நேர்க்கணியத் தாக்கத்தைச் செலுத்தியுள்ளதாகவும் அவர்களின் தொழில் முயற்சியினை மேம்படுத்துவதற்கு உளவியல் ரீதியான சவால்களை அவர்கள் எதிர்கொள்ளும் திறன் பிரதான பங்கினை வகித்திருந்தது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆய்வு முறையியல்

### தரவு சேகரிப்பு முறைகள்

தரவுகள் முதலாம் நிலை மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. இப்பிரதேச தும்புத்தொழில் பெண்களின் வாழ்வாதாரத்தில் எத்தகைய பங்குவகிக்கிறது மற்றும் இவ் கைத்தொழிலில் இவர்கள் எதிர்நோக்கும் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் போன்றவற்றை கண்டறிய முதலாம் நிலைத்தரவுகளானவை வினாக்கொத்து, நேரடி அவதானம் மற்றும் நேர்காணல் மூலமும் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### மாதிரி எடுப்பு

இலங்கையின் வடமாகாணத்தின் மாவட்டங்களில் ஒன்றாகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கொழும்புத்துறை J/62 கிராமசேவகர் பிரிவின் கீழ் 1965 குடித்தொகை காணப்படுகின்றது. இதில் 976 ஆண்களும் 1089 பெண்களும் உள்ளனர். இதில் சிறு கைத்தொழிலாக தற்போது தும்புத்தொழிலை செய்து வருபவர்களாக 15 பெண்கள் உள்ளனர். அந்தவகையில் இவ் 15 பெண்களும் நோக்க மாதிரி எடுப்பினை அடிப்படையாக கொண்டு தெரிவு செய்யப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தரவுப் பகுப்பாய்வு

இவ் ஆய்வில் அளவு ரீதியான பகுப்பாய்வு மற்றும் பண்பு ரீதியான பகுப்பாய்வு என இரண்டு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தரவுப் பகுப்பாய்வானது விபரணமுறை, 5 புள்ளி licket scale ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்பு ரீதியில் மாறிகளின் போக்கினையும் அவற்றிற்கிடையிலான தொடர்பினையும் விளக்குவதற்கு விபரண முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 01: தீர்மான விதிகளின் முடிவுகள்**

| வீச்சு | தீர்மான முடிவுகள் |
|---|---|
| $1 \leq X \leq 2.5$ | குறைந்த நிலை |
| $2.5 \leq X \leq 3.0$ | நடுத்தர நிலை |
| $3.5 \leq X \leq 5.0$ | உயர்ந்த நிலை |

மூலம்: ஆய்வாளனின் மதிப்பீடு

5 புள்ளி Lickert scale இனை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வில் பெறப்பட்ட இடைப் பெறுமானங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீச்சுக்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளது.


**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

**கருதுகோள் பரிசோதனை -1**

Ho: தும்புத் தொழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம் அதிகரித்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படவில்லை.
Ha: தும்புத் தொழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம் அதிகரித்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படுகின்றனர்.


*பெண்கள் தும்புத்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம் அதிகரித்துள்ளது.*

ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பெண்களின் மாத வருமானமானது தும்புத்தொழிலில் ஈடுபட முன்னர் பூச்சியமாகவும் தும்புத்தொழிலில் ஈடுபட்ட பின்னர் 8000 - 14000 ரூபா என்ற வீச்சினுள்ளும் காணப்படுகின்றது.




**வரைபடம் 02:**
மூலம்: ஆய்வுக்களம் 2021


வினாக்கொத்தில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 8000 - 10 000 ரூபா வரையில் 9 பெண்களும், ரூபா 10 001 - ரூபா 12 000 வரையில் 4 பெண்களும், ரூபா 12 001 - ரூபா 14 000 வரையில் 2 பெண்களும் பெறுகின்றனர்.




**வரைபடம் 03:**
மூலம்: ஆய்வுக்களம் 2021

அந்தவகையில் தும்புத்தொழிலில் ஈடுபட முன்னர் பெண்களின் சராசரி மாதாந்த வருமானம் பூச்சியமாக காணப்பட்டது. தும்புத்தொழிலில் ஈடுபட்ட பின்னர் சராசரி மாதந்த வருமானமானது ரூபா 10 433.33 ஆக அதிகரித்துள்ளது.

*பெண்கள் தும்புத்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம் அதிகரித்ததனூடாக அவர்களது குடும்பத்தின் மாதாந்த செலவுகளும் அதிகரித்துள்ளது.*




**வரைபடம் 04:**
மூலம்: ஆய்வுக்களம் 2021

தும்புத்தொழில்களில் ஈடுபட்ட பின்னர் குடும்பத்தின் கல்விக்கான சராசரி மாதாந்த செலவு ரூபா 2500 ஆகவும் உணவுக்கான சராசரி மாதாந்த செலவு ரூபா 2833.33 ஆகவும் சுகாதாரத்திற்கான சராசரி மாதாந்த செலவு ரூபா 1400 ஆகவும் வீட்டுச் சேவைகளுக்கான சராசரி மாதாந்த செலவு ரூபா 1700 ஆகவும் தனிப்பட்ட சராசரி மாதாந்த செலவு ரூபா 606.67 ஆகவும் ஏனைய சராசரி மாதாந்த செலவு ரூபா 460 ஆகவும் அதிகரித்துள்ளது.

*தும்புத்தொழிலில் ஈடுபட்ட பின்னர் பெண்களின் வலுவூட்டல் அதிகரித்துள்ளது.*

தும்புத்தொழிலில் ஈடுபட்ட பின்னர் பெண்களின் வலுவூட்டல் தொடர்பானசில கூற்றுகள் வழங்கப்பட்டு 5 Point Likert முறையினூடாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணை மூலமாக ஒவ்வொரு கூற்றுக்களின் மதிப்பீட்டு பெறுமதிகள் காட்டப்பட்டுள்ளது. இதன்படி 10 வினாக்கள் வழங்கப்பட்டு அவற்றிற்கு பின்வரும் அளவுத்திட்டங்கள் வழங்கப்பட்டு அவர்களிடமிருந்து தரவுகள் பெறப்பட்டது. 01 பூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை 02 ஏற்றுக்கொள்ளவில்லை ஓரளவு ஏற்றுக்கொள்கிறேன் 03. ஏற்றுக்கொள்கிறேன் 04. பூரணமாக ஏற்றுக்கொள்கிறேன்.

**அட்டவணை 02**

| **கூற்றுக்கள்** | **இடை** | **நியம விலகல்** | **தீர்மானங்கள்** |
|---|---|---|---|
| குடும்பத்தில் மதிக்கப்படும் தன்மை | 4 | .845 | உயர்ந்த நிலை |
| சமூகத்தில் மதிக்கப்படும் தன்மை | 3.27 | 1.033 | நடுத்தர நிலை |
| பிள்ளைகளின் கல்வி தொடர்பான தீர்மானம் | 4.6 | .632 | உயர்ந்த நிலை |
| பெற்றோருக்கு உதவுவதற்கான சுதந்திரம் | 4 | .756 | உயர்ந்த நிலை |
| சகோதரர்களுக்கு உதவுவதற்கான உரிமை | 2.8 | .676 | குறைந்த நிலை |
| வீட்டிற்கு செலவு செய்யும் அதிகாரம் | 4.53 | .516 | உயர்ந்த நிலை |
| வெளியிடங்களுக்கு செல்வதற்கான சுதந்திரம் | 4.4 | .632 | உயர்ந்த நிலை |
| ஆண்களுக்கு நிகராக வருமாம் உழைக்க முடிதல் | 2.27 | .458 | குறைந்த நிலை |
| ஏனையவர்களில் தங்கியிருக்காத நிலைமை | 3.89 | .64 | உயர்ந்த நிலை |
| நிதிச்சொத்துக்களை சொந்தமாக வைத்திருப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஆற்றல் காணப்படல் | 4 | .655 | உயர்ந்த நிலை |
| கூற்றுக்களின் சராசரி | 3.78 | | உயர்ந்த நிலை |

மூலம்: ஆய்வுக்களம் 2021

அட்டவணையானது தும்புத்தொழிலில் பெண்கள் ஈடுபட்டதன் பின்னர் பெண்களின் வலுவூட்டல் தொடர்பாக சில கூற்றுக்கள் வழங்கப்பட்டு அக்கூற்றுக்களுக்கான இடை, நியமவிலகல், தீர்மானங்கள் என்பவற்றைக் காட்டுகின்றது.

இதன்படி தும்புத்தொழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களது அதிகார வலு அதிகரித்துள்ளது என்பது தொடர்பான கூற்றுக்களின் சராசரிப் பெறுமதியானது $3.5 \leq X \leq 5.0$ எனும் வீச்சினுள் காணப்படுவதனால் இக் கூற்றுக்கள் உயர்ந்த நிலையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

எனவே தும்புக் கைத்தெழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம் அதிகரித்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படுகின்றனர் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

***நேர்காணல் 01***

கிராமத்தின் மாதர்சங்க உறுப்பினர் ஒருவரிடம் நேர்கண்ட போது அவர் பின்வருமாறு தனது கருத்தினை முன்வைத்தார் ''தமது கிராமத்தின் பள்ளி மாணவர்கள் படித்ததில் ஏன் வளர்ந்ததில் கூட 50 சதவீதப் பங்கினை கயிறு திரித்தல் மூலமான வருமானமே பெறுகின்றது. மிகவும் சிரமமான வேலையாக இருந்தாலும் அதனால் வரும் சம்பாத்தியம் ஒரு குடும்பத்தையே கொண்டு செல்லும் அளவிற்கு காணப்பட்டது. 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு பின் புத்தளம், சிலாபம் போன்ற இடங்களில் இருந்து இங்கு கயிறு வராத நிலையிலும் பொருளாதார நடைமுறைச்சிக்கலை தும்புத்தொழிலான கயிறு திரித்தல் தீர்த்து வைத்தது என்று எம் மக்களும் திடீரென தோன்றிய கயிறு கொள்வனவாளர்களும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். தற்போது மட்டைதாட்டல், தும்படித்தல், கயிறு திரித்தல் என்பன அருகி காலப்போக்கில் இராச தொழில், இராச வருமானம் என்று முன்னோர்களால் சொல்லப்பட்ட வார்த்தைகள் எல்லாம் முற்றாக அருகிவிடுமோ என அங்கலாய்க்க வேண்டிய நிலை வருமோ எனத் தோன்றுகின்றது'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

***நேர்காணல் 02***

கிராமத்தில் தும்புத்தொழிலில் ஈடுபடும் ஒருவரிடம் நேர்கண்ட போது அவர் பின்வருமாறு தனது கருத்தினை முன்வைத்தார் மருதமும், நெய்தலும் சேர்ந்த இக் கிராமத்தில் பச்சைப்பசேலென வயலும், கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கடல்வளமும் கூடிய கிராமம் ஆகும். இது பாரம்பரிய தொழிலான மீன்பிடிக்கும் சிறு தொழில்களில் ஒன்றான தும்புத்தொழிலுக்கும் பெயர்போன கிராமம் ஆகும். இங்கிருக்கும் ஆண்களுக்கு மீன்பிடித்தொழிலும் பெண்களுக்கு தும்புத்தொழிலும் முக்கியமாக இருந்தன. 100ற்கு மேற்பட்ட வள்ளங்கள் கொண்டு மீன்பிடிக்க சென்றதுண்டு. அந்நேரத்தில் இங்கிருக்கும் ”கலங்கெட்டி” மீன்களுக்கு சந்தை வாய்ப்பு அதிகமாவே இருந்தது. இதேபோன்று பெண்களுக்கு சிறு கைத்தொழிலான தும்புத்தொழில் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு கைகொடுத்தது. எமது கடற்பரப்பில் சிறுபகுதியில் 100ற்கு மேற்பட்ட பெண்கள் தங்களுக்கான இடத்தை ஒதுக்கி இத்தொழிலை செய்து வந்தனர். ஒவ்வொரு வீட்டுப்பெண்களும் இத்தொழிலையே

தமது வாழ்வாதாரத்திற்கு கிடைத்த வரமாக கருதினர். ஆனால் தற்போது 15 பெண்களே இத்தொழிலில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

***நேரடி அவதானம்***

இலங்கையில் யாழ்மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாகும். தும்புத்தொழில் இலங்கையில் பிரதானமானதாகவும் யாழ்மாவட்டம் வள மூலாதாரத்தில் ஒன்றானதாகவும் காணப்படுகிறது. தெங்கு உற்பத்திப் பொருட்களிற்கு உள்நாட்டிலும், உலகளாவிய நாடுகளிலும் அதிக கேள்வி காணப்படுகிறது. யாழ் மாவட்டத்தில் தும்புத்தொழில் உற்பத்தி வகைகள் மிகவும் குறைவாகவும், தரத்தில் தாழ்ந்தநிலையிலும் காணப்படுகிறது. இந்நிலை இத்தகைய உற்பத்திகளின் நீண்ட கால நிலைத்து நிற்றலைக் கேள்விக் குறியாக்குகிறது

குறிப்பாக கொழும்புத்துறை பிரதேசத்திலுள்ள தொழில் முயற்சியாளர்கள் மனோநிலை முன்னைய போர்ச் சூழல் அனுபவங்களையும், அவற்றின் தாக்கங்களை உள்ளடக்கி, ஆபத்தை தவிர்த்து வாழும் எண்ணத்தையே ஏற்படுத்தி இருக்கின்றது. இத்தொழிலில் ஈடுபடும் பெண்களில் அதிகமானோர் தும்பினை விற்கும் செயற்பாட்டிலேயே காணப்படுகின்றனர். அதற்கு அடுத்த படிமுறைகளிலான பெறுமதி சேர்ப்பில் ஈடுபடுவதில்லை.

**கருதுகோள் பரிசோதனை - 2**

*Ho: தும்புத்தொழில் ஈடுபடும் பெண்களுக்கு அத்தொழிலில் பலங்கள், வாய்ப்புக்கள் என்பன காணப்பட்டாலும் பல்வேறு பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றை எதிர்நோக்கவில்லை.*

*Ha: தும்புத்தொழில் ஈடுபடும் பெண்களுக்கு அத்தொழிலில் பலங்கள், வாய்ப்புக்கள் என்பன காணப்பட்டாலும் பல்வேறு பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றை எதிர்நோக்குகின்றனர்.*

*பலங்கள்*

1 திட்டமிட்ட சேமிப்புக்கள்
2 சொந்த முயற்சியாக காணப்படுகின்றமை.
3 நவீன இயந்திரங்களின் பயன்பாடின்றி உடல் வலிமையை பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுகின்றமை.
4 தும்புத்தொழிலுக்கான மூலப்பொருளான தேங்காய் மட்டைகளினைத் தாமாகவே உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய நிலையில் உள்ளமை.
5 தமது நேரத்தினை இத்தொழிலுக்காக அதிகளவில் பயன்படுத்துகின்றமை.

*பலவீனங்கள்*

1 விளம்பரப்படுத்தும் நிலைமை காணப்படாமை.
2 விநியோக வழிமுறைகளை விளங்கிக்கொள்வதில் உள்ள தாமதம்.
3 தும்புத்தொழிலை மேற்கொள்வது தாழ்வான ஒன்று என்று கருதுகின்ற மனோநிலை காணப்படுகின்றமை.

4 பெறுகின்ற கடனை மீளச் செலுத்துவதற்கான இயலளவின்மை. இதனால் கடன் அடிப்படையில் முதலீடு செய்ய முடியாமை.
5 தங்களது உற்பத்திப் பொருட்களுக்கு குறித்த விலையை நிர்ணயிக்க முடியாமை.
6 மூலப்பொருட்களை வேறு உற்பத்திக்கு பயன்படுத்தல்.
7 தும்புத்தொழிலுக்கு தேவையான மூலதனத்தினை திரட்ட முடியாத நிலைமை காணப்படுகின்றமை.
8 நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவின்மை.
9 விலையிடலில் உள்ள உபாயங்களை தேர்ந்து எடுப்பதில் உள்ள போதிய அறிவின்மை.
10 முயற்சியாளர்கள் பொருளிற்கான சந்தைக் கேள்வியினை கவனத்தில் கொள்ளாது தாம்மால் இயன்ற உற்பத்தியினை செய்து வருவதால், விற்பனை கடினமாக உள்ளது.
11 இப்பெண்கள் உற்பத்தி மட்டத்தில் மிக ஆரம்ப நிலையிலேயே உள்ளனர். இவர்களின் உற்பத்தி எதுவித புத்துருவாக்கமும் அற்ற நிலையில் உள்ளது.
12 இவர்களின் வழங்கல் சந்தை கிராம மக்களை நோக்கியே உள்ளது. யாழ் நகரமக்களையோ, மொத்த வியாபாரிகளையோ கவரவில்லை.
13 போதிய மூலதனம் இன்மையால் உற்பத்தியாளர்கள் அதிக விலை கொண்ட உபகரணங்களோ, பொருத்தமான நிறுவன இட அமைப்புகளோ பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.
14 தொழில் முயற்சியாளர்களிற்கு தொழிலை முன்னேற்றுவதற்கான மனோநிலை குறைவாகவும், உற்பத்தியில் உயர்நிலை அடைய வேண்டும் என்ற எண்ணமும் இல்லாமை.

*வாய்ப்புக்கள்*

1 குறைந்த முயற்சியாளர்கள் என்பதனால் போட்டி குறைவாக இருத்தல்.
2 தமது உற்பத்திகள் அனைத்தையும் விற்பனை செய்யக்கூடியதாக இருத்தல்.
3 தும்புத்தொழிலுக்கான இயற்கைச் சூழல் காணப்படுகின்றமை. (கடல் வளம்)

*அச்சுறுத்தல்கள்*

1 குறித்த இலக்கு சந்தையை அல்லது வாடிக்கையாளரை அடையாளம் காணமுடியாது உள்ளமை.
2 நிதி நிறுவனங்கள் தும்புக்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்வராமை.
3 தும்புத் தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு போதியளவு சந்தை வாய்ப்பு இல்லாததுடன் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களும் குறைவாக காணப்படுகின்றமை.
4 தும்புத் தொழில் தொடர்பாக இடைத்தரகர்களின் சுரண்டல்கள் இருத்தல்.
5 பாரியளவிலான பயிற்சிகள் இப்பிரதேசத்தில் காணப்படாமை.
6 தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தரவுகளின்படி போரிற்கு முன்னரான பயிற்செய்கை நிலம் 12480 ஹெக்டேயர் ஆகவும், போரின் போது

பாதிப்படைந்தவை 6125 ஹெக்டேயர் ஆகவும் காணப்படுகிறது. தற்போது கேள்விக்கேற்ப மூலப்பொருள் கிடைப்பனவு இன்மை காணப்படுகிறது.

7 தற்போதைய பணவீக்கத்திற்கேற்ப தும்புத்தொழில் மூலமான வருமானம் குறைவாக உள்ளமை.
8 தென்னை வளம் பெருமளவில் யுத்த காலத்தில் அழிக்கப்பட்டமை.
9 தும்புத் தொழில் தொடர்பான ஊக்குவிப்புக்கள் குறைவாக உள்ளமை.
10 ஏனைய பிரதேசங்கள் அல்லது நாடுகள் மூலப்பொருட்களாகவே கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றமை.
11 தொழிற்பயிற்சி, திறன் விருத்தி மற்றும் தொழில் முனைவு அபிவிருத்தி போன்றவற்றினை வழங்குவதற்கு போதியளவான நிறுவனங்கள் இன்மை.
12 தும்புத் தொழிற்துறையில் நிலவும் தொழில்நுட்ப பற்றாக்குறை.
13 தும்பு உற்பத்தி பொருட்களின் விலையில் காணப்படும் தளம்பல் நிலைமை.
14 நிதி நிறுவனங்களில் காணப்படும் இறுக்கமான கட்டுப்பாடுகள்.

## முடிவுரை

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தரவுகளின்படி யாழ் மாவட்டத்தில் உள்ள நுண், சிறிய, நடுத்தர நிறுவனங்கள் 2136 ஆகவும், அவற்றில் 95 நிறுவனங்கள் தெங்கு உற்பத்தியில் ஈடுபடுபவையாகவும் காணப்படுகின்றன. இலங்கையின் பிரதான பயிற்செய்கையில் உற்பத்திகளில் 12% பங்களிப்பினை வழங்கி தென்னை உற்பத்திப் பொருள் சாதனையீட்டியும், இலங்கையில் மொத்தத் தென்னைப்பயிரிடல் நிலமாக 395,000 ஹெக்டேயர் காணப்படுகிறது (EDB). இலங்கை தும்பு உற்பத்திக்கான வளக் கிடைப்பனவில் உலக நாடுகளில் சிறந்த இடத்திலுள்ளது, எனினும் இத் தும்பு மூலப்பொருள் குறைவாகவே இலங்கையில் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் கடந்த 30 வருட உள்நாட்டுயுத்தம் காரணமாக வடமாகாணம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. பல வியாபார நிறுவனங்கள் தமது நிலையிலிருந்து பின்வாங்கியதோடு பலர் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியும் இருந்தனர். இது முயற்சியாளர்களுக்கு மீளமுடியாத ஓர் நிலையினை தோற்றுவித்திருந்தது. எவ்வாறாயினும் போரின் முடிவானது போருக்கு பிந்திய சூழ்நிலையில் சுயதொழில்களை விருத்தி செய்வதற்கான பல வாய்ப்புக்களை உருவாக்கியிருந்தது. தொடர்ச்சியான போரினால் பல விளைவுகள் ஏற்பட்டிருந்தன. மக்கள் தமது மரபு ரீதியான வருவாயினைப் பெற்றுக்கொள்ளும் வழிகளில் இருந்து பணத்தைச் சம்பாதிப்பதற்கான வணிக முயற்சிகளாக மாற்றீடு செய்துகொள்ள விரும்பினர். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் பல உருவாகியிருக்கின்றன. அவர்கள் பெரும்பாலும் சிறு தொழில் முயற்சிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலேயே தங்கியிருக்கின்றனர். அதாவது வருமானத்தை உழைத்துத்தரும் ஆண் மகனை இழந்த குடும்பங்களில் விரும்பியோ விரும்பாமலோ பெண்களே குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டியிருந்தது. இதனால் அவர்கள் சிறுதொழில் முயற்சிகளை ஆரம்பித்து நடாத்துவதில் ஈடுபடத் தொடங்கினர். அவ்வாறான தொழில்களில் தும்புத்தொழிலும் ஒன்றாக உள்ளது.

கொழும்புத்துறை பிரதேசத்தினை பொறுத்த வரையில் ஆரம்பத்தில் அதிகளவானோர் தும்புத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இத்தொழிலில் உள்ள பல்வேறுபட்ட பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக தற்போது விரல்விட்டு எண்ணக்கூடிவர்களே தங்கள் வருமானத்திற்காக இத்தொழிலில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும் இப்பிரதேசத்தில் தும்புக் கைத்தொழிலில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அவர்களது வருமானம் அதிகரித்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படுகின்றனர்.

## பரிந்துரைகள்

1 தும்புத்தொழிலை செய்துவரும் தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படவேண்டும். அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள திவிநெகும வாழ்வின் எழுச்சித் திட்டம் ஊடாகவும் இப்படியான பாரம்பரிய சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய உதவிகள் வழங்கப்பட்டால் அவை சிறு கைத்தொழிலை மேற்கொண்டுவரும் தொழிலாளர்களுக்கு பாரிய உதவியாகவும் அமையும். தொழில்வாய்ப்பும் அதிகரிக்கும்.
2 இத்தொழிலில் ஈடுபடுபவர்களைப் பொறுத்தவரை இவர்கள் படிக்காதவர்களாக காணப்படுவதனால் இவர்களுக்குப் புரிய வைக்கும் வகையிலான சந்தை நிலைமைகள் மற்றும் தொழில் விஸ்தரிப்புக்கள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுதல் வேண்டும்.
3 மேலும் இப் பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் குறிப்பாக இத்தொழில் புரிபவர்களிடையே தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் கிடைப்பனவு என்பது இல்லாத நிலையே காணப்படுகின்றது. எனவே இவர்களின்சமூக அமைப்பிற்கு ஏற்ற வகையிலான தொழில்நுட்பத்தினை கிடைக்கச் செய்வதன் மூலமும் அதன் சிறந்த பயன்பாட்டின் ஊடாகவும் தும்புத்தொழில் மூலம் அதிகரித்த வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.
4 இக்கிராமப்புறப் பெண்களின் தும்புத்தொழில் முயற்சிகளினை ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தொழில்களாக முன்னேற்றுவதற்கு உள்நாட்டுக் கம்பனிகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
5 தும்புத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் நிதிப்படுத்தலில் சில பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். எனவே இதற்குத் தீர்வாக நிதி நிறுவனங்கள் அவர்களின் கடன் வழங்கல் மற்றும் மீளளித்தல் நடவடிக்கைகளின் போது இத்தொழில் முயற்சியாளரின் நிலையைக் கருத்திற்கொண்டு செயற்படுதல் வேண்டும்.
6 இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு போதிய நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், குறைந்த வட்டியில் கடன்களை வழங்குதல், நீண்டகால கடன் வசதிகளை வழங்குதல்.
7 உற்பத்திக்கு ஏற்ற விற்பனை மேம்பாட்டு நிலையங்களை நிறுவுதல்.
8 தும்புத்தொழிலில் சிறப்பான முறையில் செயற்படும் பெண்களை பேட்டிகண்டு அவர்களை கௌரவிப்பதுடன் பரிசில்களையும் வழங்குவதன் மூலம் அத்தகைய தொழில் முயற்சியாளர்களையும் தொழில்முயற்சிகளையும் ஊக்குவித்தல்.
9 இப்பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் பாரம்பரிய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள் நிறைந்த ஒருபிரதேசமாகக்

காணப்படுவதால் இத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற சில பெண்கள் சமூக ரீதியான சில விமர்சனங்களிற்கு உள்ளாகுவதாகத் தெரிவித்திருந்தனர். எனவே இது தொடர்பான விழிப்புணர்வுகளை சமூக நல்லிணக்க நிறுவனங்கள் இப்பிரதேச மக்களிற்கு வழங்குதல் வேண்டும். அதாவது பல துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமமாகப் பெண்களும் முன்னேறி வருதல் வேண்டும் என்ற மனோநிலையினை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

10 இந்த உற்பத்திகள் உளளுர் சந்தை அல்லது பிராந்திய சந்தையைக் கொண்டதாகவே பெருமளவிற்குக் காணப்படுகின்றன. இதனால் இவை சிறியளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்குத் தீர்வாக திட்டமிட்ட அடிப்படையில் இப் பொருளை உற்பத்தி செய்வது மட்டுமன்றி பல்வேறு புதிய பொருட்களினையும் தேவையான அளவிற்கு உற்பத்தி செய்து சந்தையை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

11 இத்தொழிலினை மென்மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு நிறுவன ஆதரவினை வழங்குதல் வேண்டும்.

12 பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு போதியளவு சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

13 இவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகையாக குறிப்பிட்டளவு மானியத்தை அரசாங்கம் வழங்குதல் வேண்டும்.

14 இத்தொழில் ஈடுபடும் பெண்களுக்கு வழங்கப்படும் நிதி வசதிகளில் அரசியல்வாதிகளின் தலையீட்டினைக் கட்டுப்படுத்துதல்.

15 இத்தொழில் முயற்சியாளர்கள் சரியான நேரத்தில் சரியான முறையில் தீர்மானம் எடுக்கும் வல்லமையினை ஏற்படுத்தல் வேண்டும்.

16 இத்தகைய உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல். குறிப்பாக உற்பத்திப் பொருட்களை வேறு பிரதேசங்களுக்கு அனுப்புதல் அல்லது இப்பிரதேசங்களுக்குள்ளேயே துரித விற்பனையை ஏற்படுத்த உற்பத்தி பொருட்கண்காட்சிகள் மாதிரிச்சந்தைகளை அமைத்தல்.

## உசாத்துணைகள்

Globalization of knowledge through innovation. (2015). 12th Annual research session. Eastern University Sri Lanka.

Gunapalan.S, & Salfiya ummah.M. (2012). Entreprenernurship and small business management.

Sathiyabama. K (2010). Rural women empowerment and entrepreneurship development. *International journal of Science and research*.

Kalbana.R, & Ambepitiya. (2018). The association between womwn's perceivedempowerment and sustainability orientation of women's entrepreneaurship in srilanka. (Mode rating effect of Psychological capita).

ISSN 2950-7227 | Vol: 1 | Issue: I | December 2022

Rathiranee.Y, & Semasinnge. D. (2014). Theimpact of micro creditor self employment of women (A survey on Jaffna district).

Safiyaummah, M., & Gunapalan. (2012). Factors influencing on entrepreneurial success.